புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

=====================================================================

# பட்டினப்பாலையில் நெய்தல் திணைப்பண்பாட்டு விழுமியங்கள்

முனைவர் பா. இங்கிறீட் போவிங்,
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல்
கல்லூரி நெய்யூர் – 629 802.
கன்னியாகுமரி மாவட்டம்.

=====================================================================

ஆய்வுச் சுருக்கம்

உலகில் தோன்றிய இனங்களில் பழமையான இனமாக தமிழர் இனமும் பார்க்கப்படுகிறது. இந்தப் பழமையான தமிழ் இனம் தன்னுடைய நாகரிகமான வளர்ச்சிக்கு வித்திட்டது பண்பாடாகும் . பண்பு என்பது பாடறிந்து ஒழுகுதல் என கலித்தொகை கூறுகிறது.கடந்த கால அனுபவங்களிலிருந்து நிகழ்காலத்தை கடந்து எதிர் காலத்துக்குச் செல்வதற்கு மனிதனுக்குப் பெரிதும் வழி காட்டியது பண்பாடாகும். பண்பாடு மாறும் தன்மை கொண்டது. ஆனாலும் சில அடிப்படை விதிகள் பண்பாட்டுச் சூழலில் மாறாமலே வந்திருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.அவ்வகையில் தமிழ் சமூகத்தின் மூத்த இனமான பரதவர்களின் வாழ்வியல் பல்வேறு இலக்கியங்களில் விரவி கிடப்பதை நாம் காண்கிறோம். அதில் குறிப்பாக பட்டினப்பாலை பரதவர்களின் வாழ்வியலை சுட்டி நிற்கிறது.இங்கு பட்டினப்பாலை கூறும் பரதவர்களை அவர்களது பண்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

## முன்னுரை

பட்டினப்பாலையில் காணலாகும் நெய்தல்திணை ஒழுக்கங்களான உரிப்பொருளின் திணை ஒழுக்கமும் கருப்பொருள்களான தெய்வம், மக்கள், மரம், புள், விலங்கு, நீர், பறை,யாழ் போன்ற புழங்குப்பொருள்களையும் சிறுபொழுது பெரும்பொழுது போன்ற காலம் உணர்த்தும் முதற் பொருளையும் நெய்தல் திணை பண்பாட்டில் பெற்றிருந்த மாண்பையும் அறிய முடிகிறது. திணை வழி வந்த தமிழ் இனக்குழுக்களில் பழமையானவர்களும் பழங்குடியினவர்களுமான பரதவர்கள் சங்க காலம் முதல் சம காலம் வரை கடல் வேட்டைத் தொழிலையே தங்கள் வாழ்வியல் முறைமையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். முல்லை நிலத்தில் வேட்டைத் தொழில் ஒழிக்கப்பட்ட இன்றைய காலக்கட்டத்தில் முல்லை நிலத்தில் வாழ்ந்த பழங்குடியின மக்கள் நவீன அரசுகளால் வேட்டைத் தொழிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டனர். ஆனால் மரபின் வழி மாறாமல் தனது பண்பாட்டுஅடையாளத்தோடு நவீன கால வளர்ச்சியை உள்வாங்கிக் கொண்டு இன்றும் பரதவர்கள் வாழ்ந்து வருவதை அறிந்து கொள்ள முடிகிறது. இப்பரதவர்களின் நீண்ட நெடிய வாழ்வியல் பண்பாட்டுச் சூழல் பட்டினப்பாலையின் வழி ஆய்வுச் செய்யப்படுகிறது.

## நெய்தல் திணையின் சிறப்பு

கடலும் கடல் சார்ந்த இடத்தையும் நெய்தல்நிலம் என்று அழைத்தனர். அங்கு அமைந்திருக்கும் குடியிருப்புகள் பரதவர் குடியிருப்புகளே ஆகும். நெய்தல் நிலம் மணற்பாங்கானது உவப்பு தன்மைக் கொண்டது. கரையருகில் வாழும் பரதவர்கள் தாம் பிடித்த மீன்களை சமைத்து உண்டனர். மீதியை வேற்று நிலத்தவர்க்கு விற்று அவர்கள் கொடுக்கும் நெல்லை உணவாகப் பயன்படுத்தினர்.இத்தகைய எழில் தன்மை உடையது நெய்தல் நிலமாகும்.

பரதவர் நிலை

மீன் பிடிக்கும் பரதவர்கள் கடற்கரையில் அமைந்துள்ள சிறு வீடுகளில் வாழ்ந்து வந்துள்ளனர், அவர்களின் வீடுகளின் முன் வலைகள் காய வைக்கப்பட்டிருக்கும். முழு நிலவு நாளில் பரந்த கருமையை உடைய குளிர்ந்த கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் தழை ஆடையை அணிந்த தங்களுடைய பெண்களோடு அவர்கள் விரும்புகின்ற உணவுகளை உண்டு மகிழ்ந்திருந்துள்ளனர் என்பதை

மடல் தாழை மலர் மலைந்தும்
பிணர்ப் பெண்ணைப் பிழி மாந்தியும்
புன்தலை இரும் பரதவர் பைந்தழை மா மகளிரொடு
பாய் இரும் பனிக்கடல் வேட்பம் செல்லாது
உவவு மடிந்து உண்டு அடியும்

(பட்டினப்பாலை – 84 -93)

என்ற பட்டினப்பாலை பாடல் வரியின் மூலம் அறியமுடிகிறது.

பரதவர் இருப்பிட சூழல்

காவிரித் துறையின் பக்கத்திலே குடிசைகள் பல காணப்பட்டன. அந்தக் குடிசைகளில் நீண்ட தூண்டில் கோல்கள் சார்த்தப்பட்டிருந்தன. இந்த குறுங் குடிசைகளுக்கு இடையே நிலவில் உள்ள இருளைப் போல வெண்மணல் நிறைந்த இடத்தில் மீன் பிடிக்கும் வலைகள் காயும் அளவுக்கு பெரிய மணல் முற்றங்கள் காணப்பட்டதை

கிடுகு நிரைத்து, எஃகு ஊன்றி
நடுகல்லின் அரண்போல
நெடும் தூண்டிலில் காழ் சோத்திய
குறுங்கூரைக் குடி நாப்பண்
நிலவு அடைந்த இருள் போல
வலை உணங்கும் மணல் முன்றில்

(பட்டினப்பாலை – 78 -83)

என்று பட்டினப்பாலை பாடல் வரி குறிப்பிடுகிறது.

வழிபாடும் தெய்வமும்

நெய்தல் நிலத்திற்கு தெய்வமாக வருண பகவான் விளங்குகிறார் என்பதை

"வருண மேய மெருமணல் உலகமும்"

(தொல்காப்பியம் – பொருளதிகாரம் – 5)

என்ற தொல்காப்பிய பாடல் வரியின் மூலம் அறிய முடிகிறது. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் பரதவர்கள் சுறாமீன் தாக்குதலால் வரும் துன்பங்களிலிருந்தும் ஏனைய பிற இன்னல்களிலிருந்தும் காத்துத் தம்மை இல்லங்களில் கொண்டு வந்து சேர்த்த நெய்தல் நிலத் தெய்வமாகிய வருணனுக்கு வழிபாடு செய்துள்ளனர். இவ்வருண வழிப்பாட்டைச் சினையுற்ற சுறாமீனின் கொம்பை நட்டு நிகழ்த்தியுள்ளனர் இதனை

" சினை சுறாவின் கோடுநட்டு
மனைச் சேர்த்திய வல் சுணங்கினால்"

(பட்டினப்பாலை – 86)

என்னும் பட்டினப்பாலை பாடல் வரி சுட்டி நிற்கின்றன.

உணவுப் பழக்கம்

கரிய மணல் மேட்டை உடைய இடத்தில் சுற்றத்தோடு ஒன்று சேர்ந்து பரதவர் வாழ்ந்தனர். கடலில் பிடித்து வந்த இரால் மீனையும் மற்ற மீன் வகைகளையும் தின்று பனங்கள்ளினையும் பருகினர் என்பதை

வரி மணல் அகன் திட்டை
இருங்கிளை இனை ஒக்கல்
கருந்தொழில் கலி மாக்கள்
கடல் இறவின் சூடு தின்றும்

*(பட்டினப்பாலை – 61 -63)*

*என்ற பட்டினப்பாலை பாடல் வரிகளின் மூலம் பரதவர்களின் உணவுப் பற்றி அறிய முடிகின்றது. மேலும் மீன் இறைச்சி போன்றவற்றை நெய்யில் பொறிக்கும் ஒசை மிகுந்த முற்றமும் நெய்தல் நிலத்தில் காணப்பட்டது.மதுக்கடைகளில் கள்ளினையும் வேக வைத்த இறைச்சியையும் விற்றுள்ளனர். மீன் பிடித் தொழிலைச் செய்யும் செருக்கான குணம் உடைய பரதவர்களின் இனத்தை சேர்ந்த சிறுவர்கள் கடலில் வாழும் இறால் மீனைச் சுட்டு அதன் தசைகளை உண்டார்கள் என்ற செய்தியையும் அறிய முடிகின்றது.*

*விளையாட்டு*

*பரதவர் குலச் சிறுவர்கள் குதிரையின் காலடி போல இலை உடைய அடப்பங்கொடியில் பூத்துள்ள மலர்களைப் பறித்துக் கட்டிக் கொள்வார்கள் நீர் நிலைகளில் மலர்ந்துள்ள ஆம்பல் மலர்களையும் தலையில் சூடிக் கொள்வார்கள் ஆரவாரிக்கும் வலிமையான அலைக் கடலில் விளையாடி மகிழ்ந்தனர். கடலில் விளையாடியதால் உடலில் பட்ட உப்பை நீக்க ஆற்று நீரில் குளித்தும் நண்டுகளை விரட்டி விளையாடியும் மணல் பொம்மைகளைச் செய்தும் விருப்பத்துடன் பகல் முழுவதும் விளையாடினார்கள். அவர்களுடைய மகிழ்ச்சி மேல் உலகத்திலுள்ள மகிழ்ச்சியை போன்றதாக இருந்ததை*

*" தீது நீங்கக் கடல் ஆடியும்*
*மாசு போகப் புனல் படிந்தும்*
*அலவன் ஆட்டியும் உரவுத் திரை*
*உழக்கியும்*
*பாவை சூழ்ந்தும் பல் பொறி*
*மருண்டும்*
*அகலாக் காதலொடு பகல்*
*விளையாடி*

*(பட்டினப்பாலை – 98)*

*என்று பட்டினப்பாலை பாடல் வரி குறிப்பிடுகிறது.*

*ஆழியின் புறச்சூழல்*

*புலால் நாறும் மணலைக் கொண்ட கடற்கரையிலே பெரிய மலையை சேர்ந்த மேகத்தைப் போலவும் தாயின் மார்பினை தழுவிய குழந்தையை போலவும் தெளிந்த நீரினையுடைய கடலோடு காவிரியாறு கலக்கின்ற இடமாகிய சங்குமுகத் துறையில் அலைகளின் ஒலி மிகுந்துக் காணப்படுகிறது இதனை*

*புலவு மணல் பூங்கானல்*
*மாமலை யணைந்த கொண்மூப் போலவும்*
*தாய் முலை தழுவிய குழவி போலவும்*
*தேறு நீர்ப் புணரியோடு யாறு தலை மணக்கும்*
*மலியோதத் தொலி கூடல் (பட்டினப்பாலை – 95 -97)*

*என்ற பாடல் வரியின் மூலம் ஆழியின் புறச் சூழலை அறிய முடிகிறது. மேலும் இதனை*

*" தாய் முலை தழுவிய குழவி போலவும்*
*மாமலைத் தழுவிய மஞ்சு போலவும்" என சீவகசிந்தாமணி பாடல் வரியும் குறிப்பிடுகிறது.*

*துறைமுகமும், கொடிகளும்*

*அலைகள் அடிக்கும் கடலில் பெரிய கப்பல்கள் அசைந்து அசைந்து செல்லும். கப்பல்களில் கட்டப்பட்டுள்ள பாய்மரங்களின் உச்சியில் கண்கவரும் வண்ணம் பலநிற கொடிகள் கட்டப்பட்டிருந்தன. " கட்டுத்தறியில் அசையும் யானைகள் போல" கப்பல்கள் அசைந்து அசைந்து பயணிக்கும் என்றும் மேலும்*

*மணற்குவை இ மலர் சிதறிப்*
*பலர்புகு மனைப் பலிப்புதவின்*
*நறவு நொடைக் கொடியோடு*

(பட்டினப்பாலை – 159)

என்ற பட்டினப்பாலை பாடலில் மணல் பரப்பின் மீது செம்மை நிறமான பூக்களைத் தூவி மீன் விற்கும் இடம், இறைச்சி வெட்டும் இடம், மீனை பொரித்து விற்கும் இடம், இறைவழிபாடு நடக்கும் இடம், பலி கொடுக்கும் இடம் என அனைத்து இடங்களிலும் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இவை பூம்புகார் எங்கும் இருந்ததினால் கதிரவனின் ஒளி அவற்றை கடந்து நிலத்தில் புக இயலவில்லை.

நீர் நிலைகள்

கடலில் சீற்றம் அதிகமாக இருக்கும் போது பரதவர்கள் மீன் பிடிக்க செல்லாத நாட்களில் குளிச்சயான நீரை உடைய கேணிகளில் குளித்து மகிழ்ந்திருந்தனர் என்பதை

தண்கேணி தனைமுற்றத்து
தீது நீங்க கடலாடியம்
மாசு போக புனல் படிந்தும்

(பட்டினப்பாலை – 51-52)

என்ற பட்டினபாலை பாடல் வரி நமக்கு உணர்த்துகின்றன மேலும் நீர் நிலைகளில் மீன்கள், நண்டுகள், ஆமை போன்ற நீர் வாழினங்கள் காணப்பட்டன.

வணிகம்

உப்பு வணிகர்களான உமணர்கள் தாங்கள் கொண்டு வந்த உப்பினை விலைபேசி விற்று விட்டு அதற்கு பதிலாக நெல்லை ஏற்றிக் கொண்டு வந்த உறுதியான படகுகளை குதிரையைக் கட்டி வைத்திருப்பது போல உப்பங்கழிகளில் படகு கட்டும் இடத்தில் கட்டி வைத்திருப்பார்கள்

மேலும் வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரி பயனும்

(பட்டினப்பாலை – 184 -185)

என்ற பட்டினப்பாலை பாடல் குறிப்பிடும் போது கடல் வழியாக மரக்கலங்களில் நிமிர்ந்து நடக்கும் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. கருமை நிறமுடைய மிளகு மூட்டைகள் மேரு மலையில் தோன்றிய மாணிக்க கற்கள் சம்புநாதம் என்னும் உயர்ந்த பொதிகை மலையில் விளைந்த சந்தணம் அகில் கட்டைகள் கிழக்கு திசை கடலில் விளையும் பவளங்கள் கங்கை ஆற்றில் விளைந்த பொருட்கள் இயற்கையில் விளைந்த உணவுப் பொருள்கள் சீனாவில் இருந்து கொடுக்கப்பட்ட கற்பூரம், பன்னீர், குங்குமம் இன்னும் பிறபொருட்கள் என அனைத்தும் கடற்கரையில் வந்திரங்கின என்பதையும் அறிய முடிகின்றது.

முடிவுரை

நெய்தல் நிலத்து பரதவர்கள் பழங்குடியினர் வாழ்க்கை வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. கடற்கரையில் குடிசைகளை அமைத்தும் கடல்வாழ் உயிரினங்களை உண்டும் வந்துள்ளனர் கடல் சார் உயிரிகளே அவர்களது பிரதான உணவு பண்பாடாக இருந்துள்ளது. திணை ஒழுக்கத்தின் படி வருண பகவான் கடவுளாக இருந்தாலும் கடலில் வேட்டையாடிய சுறாமீன் முள்ளையே பொது வழியில் நட்டு வீரத்தின் அடையாளமாக வழிபட்டு வந்துள்ளனர். பரதவ குல சிறுவர்கள் ஆட்டு கிடாயினையும் கொளதாரி பறவையினையும் ஒன்றோடு ஒன்று மோத விட்டு விளையாடி மகிழ்ந்தனர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. பழங்குடியின பரதவர் வேட்டையாடி வாழ்ந்த சூழலில் துறைமுகங்கள் அமைத்து கடல் வழியே வணிகம் செய்யும் சமூகம் காவிரி பூம்பட்டினத்தில் இருந்துள்ளதையும் அறிய முடிகிறது.

பார்வை நூல்கள்


1. கதிர் முருகு . டாக்டர் - பட்டினப்பாலை நெடுநல்வாடை சாரதா பதிப்பகம்
2. சாமி சிதம்பரனார் - பட்டினப்பாலை அறிவு பதிப்பகம்
3. இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம் சைவ சித்தாந்த நூற்பதிப்பகம்
4. திருத்தக்கத் தேவர் – சீவக சிந்தாமணி – சாரதா பதிப்பகம்
5. ருக்மணி, இரா - பட்டினப்பாலை டிரஸ்ட்புரம் கோடம்பாக்கம்


********* ********* ********** ********* ********* ********** ********** **********